**இலங்கைப் பாராளுமன்றம்**
**பதவி வெற்றிடங்கள்**
**உணவு, பான உதவியாளர்**

---

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடமாக உள்ள உணவு, பான உதவியாளர் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025 ஆகஸ்ட் மாதம் 29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் **"பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை **www.parliament.lk** என்ற இணைய தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**கவனத்திற்கு**: விண்ணப்பப்படிவத்தில் மேலே தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் கட்டாயமானது.

**உணவு, பான உதவியாளர் (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 06)**

1. **சம்பள அளவுத்திட்டம்:**

   2025.03.25ஆந் திகதிய 04/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் Iஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,249-0x 5401/0x 590/3 x 68 -060,04 0/- ஆகும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்தச் சம்பளம் ரூ. 90,000.00 ஆகும்).

2. **கல்வித் தகைமைகள்:**

   கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் பத்திரங்கள் (சாதாரணத் தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3. **தொழில் தகைமைகள்:**

   இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM) / தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA)/ இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை (VTA) அல்லது அதனையொத்த தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கும் குறையாத கற்கை நெறிக் காலத்தைக் கொண்ட அடிப்படை உணவகச் சேவைகள் கற்கை நெறியை / உணவு, பான சேவைகளுக்கான கற்கை நெறி ஒன்றைப் பயின்று அதனை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

## 4. அனுபவம்:

மேலே 2 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் நட்சத்திர ஹோட்டல் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உணவகப் பணியாளர் / உணவு, பான உதவியாளர் அல்லது அதற்கு சமனான பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கும் குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 5. வயதெல்லை:

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

## 6. ஆட்சேர்ப்பு முறை:

தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

### (அ) தொழில்சார் பரீட்சை

மேற்படி பதவிக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இப்பரீட்சையில் உணவகச் சேவைகளில் விண்ணப்பதாரர்கள் கொண்டுள்ள திறன்கள் மதிப்பீடு செய்யப்படும். இதில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

### (ஆ) நேர்முகப் பரீட்சை

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் கீழ்க் காணும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். இதில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| தொ. இ | விடயப் பரப்பு |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை / நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் |

## 7. சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள், அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள் பற்றிய ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையைச் செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

**8.** விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். தேவைப்படுத்தப்படும்போது மட்டும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்
(இ) தொழில் தகைமை சான்றிதழ்கள்
(ஈ) அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்

**9.** அரச/மாகாண அரச சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

**10.** பதவியைப் பெற ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்கு செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

**11.** விண்ணப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அப்போது அவர் தகைமையற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

**12.** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற விண்ணப்பப்படிவங்களும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

**குஷானி ரோஹணதீர**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2025 ஆகஸ்ட் மாதம் **......** ஆம் திகதி.